சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:19.10.2024

PW1: பாண்டியம்மாள் க/பெ– காட்டுராஜ்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பிராது தாக்கல் செய்யும் போது எனது வயது 36. நான் 1974ல் பிறந்தேன். 1வது பிரதிவாதி பெயரில் உள்ள 1வது அயிட்ட சொத்து 1967ல் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு 10 வருடத்திற்கு முன்பே 1ம் அயிட்ட சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். தபசில் 2வதுஅயிட்ட சொத்து நான் பிறந்து 4 வருடங்களுக்கு பின்பு வாங்கப்பட்டது என்றால் சரிதான். தபசில் 3வது அயிட்ட சொத்து நான் பிறந்து 8 வருடத்திற்கு பின்பு வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு 1999ல் திருமணம் நடைபெற்றது. நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எங்கள் தோட்டத்தில் நான் வேலை பார்ப்பேன். நான் 8 வயதில் இருந்து எங்கள் தோட்டத்தில் வேலை செய்து வருகிறேன். தபசில் 1, 2, 3 அயிட்ட சொத்துக்கள் நான் வேலை பார்த்து வாங்கவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நான் வேலைக்கு சென்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், விவசாய வேலை பார்த்து வந்தேன். நான் மதுரை மாவட்டம், விட்டன்குளத்தில் திருமணமான நாளிலிருந்து எனது கணவருடன் வசித்து வருகிறேன். தபசில் 4வது அயிட்ட சொத்து எப்போது வாங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அது என் தாயார் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.13 ஆனது எனது தாயார் பூச்சியம்மாள் பெயரில் உள்ள

கிரைய ஆவணம் என்றால் சரிதான். தபசில் 5 வது அயிட்ட  சொத்து நான் பிறந்து 8 வருடத்திற்கு பின்பு வாங்கப்பட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு விடுமுறை நாட்களில் நான் விருதுநகருக்கு வந்து விவசாயம் பார்த்தேன். நான் விவசாயம் செய்து வருவதாக சொல்லப்படும் சொத்து எனது தகப்பனார் பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான். தபசில் 1 முதல் 3, 5 அயிட்டசொத்துக்கள் நான் பிறப்பதற்கு முன்பு வாங்கப்பட்ட சொத்து என்றும், தபசில் 5ம் அயிட்ட சொத்து நான் பிறந்து 8 வருடத்திற்கு பின்பு வாங்கப்பட்டது என்றும், அது என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து என்றும் சொன்னால் சரியல்ல, நாங்கள் உழைத்து வாங்கியது. 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் எனது திருமணத்திற்கு பின்பு 2, 3 பிரதிவாதிகளின் பராமரிப்பில் தான் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் தனியாக இருந்தார். வா.சா.ஆ.4 ல் எனது ஆயுளுக்கு பின் தபசில் சொத்து நடைமுறைக்கு வரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் 1ம் பிரதிவாதிக்கு அதில் உரிமை கிடையாது. எனது தகப்பனார் இறந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. எனது தகப்பனார் 2019ல் இறந்தார் என்றும், நான் 2015ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தேன். 2016ல் எனது தகப்பனார் 2, 3 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் பதிவு செய்த 1மாதம் கழித்து எனக்கு தெரிய வந்தது. அதை பற்றி எனது தகப்பனாரிடம் கேட்டேனா என்றால் எனது தந்தை சுயநினைவுடன் இல்லை. எனது தந்தை சுயநினைவு இல்லாமல் இருக்கிறார் என்று தெரிந்தும், அவருக்கு காப்பளார் நியமிக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் சுயநினைவுடன் இருக்கிறார் என்று தெரிந்து தான் அவரை 1ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்துள்ளோம்

என்றால் சரியல்ல. தபசில் 4ம் அயிட்ட சொத்து வீடு எனது தகப்பனார் அனுபவத்தில் இருந்தது. தபசில் 4ம் அயிட்டசொத்தை பொறுத்து எனக்குதனிப்பட்ட முறையில் அனுபவம் இல்லை என்றால் எனது தகப்பனார் வீட்டிற்கு வந்து போய் கொண்டிருந்தோம். எனது தாயார் இறக்கும் போது 100 பவுன் நகை வைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 1999ம் வருடம் எனதுதந்தை எனக்கு திருமணம் செய்து வைத்தார். எனது திருமணத்திற்கு எனது தகப்பனார் எந்த நகையும் போடவில்லை. எனது தகப்பனார் சுயநினைவின்றி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாக பதிவாளரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் கீழே விழுந்து தான் ஒரு கை, கால் வராமல் சுயநினைவை இழந்தார் எந்த வருடம் என்று எனக்கு ஞாபகமில்லை. எனது தந்தை அடிப்பட்டவுடன் திருவேங்கடம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். எனது தகப்பனார் 3 மாதமாக சுயநினைவில்லாமல் இருந்தார். திருவேங்கடம் மருத்துவமனை மருத்துவர்களை விசாரித்தால் எனது தகப்பனார் சுயநினைவில்லாமல் இருந்தது பற்றி தெரியவரும் என்றால் சரிதான். எனது தகப்பனார் 20 நாள் திருவேங்கடம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து 10 நாட்கள் மதுரை, மீனாட்சி மிசனில் சிகிச்சையில் இருந்தார். எனது தகப்பனார் சுயநினைவில் இருந்தாரா இல்லையா என்பதை அறிய எனது தந்தை 2016ல் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சாட்சிகளை விசாரணை செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனது சகோதரி முனியம்மாள், நான், மாரீஸ்வரி மற்றும் எனது உடன் பிறந்த சகோதரர் பாண்டி நாங்கள் கூட்டுக்குடும்பம். மூத்தவர் முனியம்மாள்.

முனியம்மாள் எனக்கு 10 வருடத்திற்கு மூத்தவர். தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்து என்றும், அதை கூட்டுக்குடும்ப சொத்தாக எடுத்து கொள்ளமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. தபசில் 5 அயிட்ட சொத்து, எனது தகப்பனார், தாயாரின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. அதனால் 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.